பரமக்குடி நகராட்சி அலுவலகம்,
நாள்.27.06.2019

**நிகழும் திருவள்ளுவராண்டு ஜுன் மாதம் 28ம் நாள் (28.06.2019) காலை 11.00 மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரண கூட்டப் பொருள்கள்**

| | |
|---|---|
| பொருள்.1 | பரமக்குடி நகராட்சி ஆணையாளர் அவர்களின் ஜுன் 2019ம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம். |
| பொருள்.2 | பரமக்குடி நகராட்சி பொறியாளர் அவர்களின் ஜுன் 2019ம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம். |
| பொருள்.3 | பரமக்குடி நகராட்சி நகரமைப்பு அலுவலர் அவர்களின் ஜுன்2019 மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம். |
| பொருள்.4 | பரமக்குடி நகராட்சி சுகாதார அலுவலர் அவர்களின் ஜுன் 2019 மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம். |
| பொருள்.5 | நிர்வாக நலன் கருதி சட்டமன்ற தேர்தல் சம்மந்தமாக தடையின்மை சான்று (NOC) வழங்குவதற்கு ரூ.500/–வீதமும், சொத்துவரி செலுத்தியதற்கான சான்று வழங்குவதற்கு ஒரு வருடத்திற்கு ற்கு ரூ.200/– வீதமும், சொத்துவரி மற்றும் குடிநீர் கட்டண பெயர் மாற்றம் செய்ய கட்டணம் ரூ.500/–ம் மற்றும் குடிநீர் இணைப்பு பழுது பார்க்க ஒரு இணைப்பிற்கு ரூ.1000/– வீதமும் வசூல் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு–<br>மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.6 | இந்நகராட்சிக்குச் சொந்தமான மதுரை–மண்டபம் சாலையில் அமைந்துள்ள தார்ச் கட்டிடத்தின் மேல்தளம் உரிமத்தினை மாத வாடகைக்கு வழங்க 20.06.2019ம் தேதியன்று மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பொது ஏலத்தில் யாரும் கலந்து கொள்ளவில்லை. ஒப்பந்தப்புள்ளியில் மட்டும் கலந்து கொண்டவர்களின் பெயர் மற்றும் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி தொகையினை முடிவு செய்யும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் |

| வ.எண் | ஏலதாரார் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1. | திருமதி.ஆர்.பிரேமா<br>க/பெ.ஆர்.ரெங்கராஜன்<br>9/239–ஏ, பொட்டி மீனாட்சி சந்து, பரமக்குடி | 28250/– |

| | | |
|---|---|---|
| 2. | திரு.வே.ராஜா<br>த/பெ.வேல்ச்சாமி<br>8/35–பி, ரயில்வே பீடர் ரோடு<br>பரமக்குடி. | 25300 |

அலுவலகக் குறிப்பு–

மேற்கண்ட விபரத்தின்படி, வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண்.2, திரு.வே.ராஜா என்பவரது ஒப்பந்தபுள்ளியில் முன்வைப்புத் தொகை ஏதும் செலுத்தாததினால் அன்னாரது ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்படுகிறது. மேலும், பலமுறை ஏலம்மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரி ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. எனவே தற்பொழுது ஒரு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றதால், நகராட்சியின் வருவாயினை கருத்தில் கொண்டு வ.எண்.1 திருமதி.ஆர்.பிரேமா என்பவரது உச்சவரம்பு ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.28250/–ஐ மன்றம் ஏற்கலாம்.

**பொருள்.7**

பரமக்குடி நகராட்சிக்குட்பட்ட வார்டு E, பிளாக்–4, நகரபுல எண்.11/7E மொத்த பரப்பளவு 25333.32 ச.மீ இடத்தில் அமைந்துள்ள (ஸ்ரீ விஷ்ணு நகர்) அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவு அரசாணை எண்.78, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள்.04.05.2012 மற்றும் அரசாணை எண்.172 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள்.13.10.2017 ஆகியவற்றின்படி கொள்கை அளவிலான ஒப்புதல் நகர் ஊரமைப்புத் துறை இயக்குநர், சிவகங்கை அவர்களால் அனுமதி வழங்கப்பட்டது. மேற்படி நகர் ஊரமைப்புத்துணை இயக்குநர் சிவங்களை அவர்களின் ஆணை எண்.5083/2019/சிம2 நாள்.31.01.2019 மனைப்பிரிவு வரைபடத்தின்படி, ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள சாலை மற்றும் பூங்காக்களை இணையம் மூலம் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் ஒப்புதலுக்கு

அலுவலகக் குறிப்பு–

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) அனுமதியற்ற மனைப்பிரிவுகளை வரன் முறைப்படுத்தும் அரசாணைகளின்படி நகர் ஊரமைப்புத் துணை இயக்குநர், சிவகங்கை அவர்கள் வழங்கியுள்ள கொள்கை அளவின்படி ஒப்புதலின்படி உள்ளாட்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட சாலைகள் மற்றும் பூங்காவும் வரைபடத்தின்படி தானப் பத்திரத்தின் மூலம் ஒப்படைப்பு செய்துள்ளதை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.1441/19/எப்2)

**பொருள்.8**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் 17.06.2019ம் தேதிய ஆய்வுக் கூட்டத்தில் எதிர்வரும் கோடைகால வறட்சியில் பொதுமக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்யும் பொருட்டு நகர்ப்புறங்களில் முன்னேச்சரிக்கையாக குடிநீர் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ள உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது. மேலும், மேற்கண்ட பணிகளுக்கு நிர்வாக அனுமதி பெற்று போர்க்கால அடிப்படையில் பணிகளை துவங்கி உரிய காலத்தில் முடிக்குமாறும் அறிவுறுத்தப்பட்டது. எனவே, இந்நகராட்சி பகுதிகளில் ஏற்படும் கோடைகால வறட்சியை சமாளிக்கும் பொருட்டு மாநில பேரிடர் சீரமைப்பு நிதியின் கீழ் (SDRF) இரண்டாம் கட்டமாக கீழ்கண்டவாறு குடிநீர் பணிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டு தொகை (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வார்டு எண்.1 புதுநகரில் சிறுமின் விசைப்பம்பிற்கு ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்துதல். | 4.00 |
| 2 | வார்டு எண்.8 கிறிஸ்தவ காலனியில் சிறுமின் விசைப்பம்பிற்கு கீழ்கண்டவாறு கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்துதல். | 4.00 |
| 3 | வார்டு எண்.18, 22 குமரன் படித்துறை, வசந்தபுரம் ஆகிய பகுதிகளில் சிறுமின் விசைப்பம்பிற்கு ஆழ்துளை கிணறு அமைத்து மின் மோட்டார் பொருத்துதல். | 8.00 |
| 4 | வார்டு எண்.13, 35 சின்னக்கடை தெரு, பங்களா ரோடு ஆகிய பகுதிகளில் சிறு மின்விசை பம்பிற்கு ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்துதல். | 7.00 |

| | | |
|---|---|---|
| 5 | வார்டு எண்.28 பொன்னையாபுரம் பகுதியில் சிறுமின் விசைப்பம்பிற்கு ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்துதல். | 4.00 |
| 6 | வார்டு எண்.19 அய்யாதுரை தெருவில் சிறுமின் விசைப்பம்பிற்கு ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்துதல். | 4.00 |
| 7 | வார்டு எண்.15 கள்ளழகர் தெருவில் ஆழ்துளை கிணறுடன் கூடிய சின்டெக்ஸ் தொட்டி அமைத்து மின்மோட்டார்பொருத்துதல். | 4.50 |
| 8 | வார்டு எண்.8 ஜீவா நகரில் ஆழ்துளை கிணறுடன் கூடிய சின்டெக்ஸ் தொட்டி அமைத்து மின்மோட்டார் பொருத்துதல். | 4.50 |
| | **மொத்தம்** | **40.00** |

மேற்படி தேர்வு செய்யப்பட்டுள்ள பணிகளுக்கு நிர்வாக அனுமதி பெற மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு –

மன்றம் அனுமதிக்கலாம். மேலும் மாநில பேரிடர் சீரமைப்பு நிதியினை எதிர்நோக்கி (SDRF) மேற்படி பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவு செய்யவும், திட்ட நிதி பெறப்பட்டவுடன் ஈடு செய்து கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள்.9**

தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019ன்படி, நகராட்சி பகுதியில் கட்டப்படும் கட்டிடங்களுக்கு பொறியாளராக பதிவு செய்ய கீழ்காணும் நபர்கள் விண்ணபம் செய்து உள்ளார்கள்.

1) டி.ரவிசந்திரன், 2) ஆர்.கதிர்வேலன், 3) எம்.பி.முருகேசன், 4) எஸ்.குழந்தை வேலன், 5) எம்.பிரதீப் குமார், 6) எம்.எம்.சரவணன்.

மேற்காணும் 6 நபர்களுக்கு பரமக்குடி நகராட்சி பகுதியில் பதிவு பெற்ற பொறியாளர் சான்று வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

அலுவலகக் குறிப்பு–

மனுதாரர் உரிய கட்டணம் ரூ.5000/–ஐ கணினி வாயிலாக செலுத்தி உள்ளதால், மேற்காணும் கட்டிட விதிகளின் படி ஐந்து வருட காலத்திற்கு 31.03.2034 வரை பதிவு செய்து வழங்கலாம். ஒவ்வொரு ஆண்டு புதுப்பித்தல் கட்டணம் செலுத்தி உரிமத்தினை புதுப்பித்து வழங்கலாம்.

(ந.க.எண்.851/2019/எப்2)

**பொருள்.10**

இந்நகராட்சி படிப்பகத்திற்கு தினசரி வரப்பெற்றுள்ள பழைய தினசரி நாளிதழ்கள் பயன்பாட்டின்றி சிதிலமடைந்த நிலையில் உள்ளதை அகற்றுவதற்கு சம்மந்தப்பட்ட உள்ளூர் பழைய பொருட்கள் வாங்கும் வியாபாரிகளிடமிருந்து விலைப்புள்ளி கோரியதில் 13.06.2019 அன்று கீழ்கண்ட இரண்டு வியாபாரிகளிடமிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண் | அகற்றக் கோரும் நாளிதழ்கள் விபரம் | அம்மன் ஸ்டீல் வியாபாரியின் விலைப்புள்ளி | குமார் ஸ்டீல் வியாபாரியின் விலைப்புள்ளிகள் |
|---|---|---|---|
| 1. | இந்நகராட்சி படிப்பகத்திற்கு பெறப்பட்ட பயன்பாடின்றி சிதிலமடைந்த நிலையில் உள்ள நாளிதழ்கள் | கிலோ ரூ.5.00/– | கிலோ ரூ.5.50/– |

மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள விலைப்புள்களில் அதிகபட்சம் கிலோ ரூ.5.50/–க்கு விலைப்புள்ளிகள் வழங்கிய குமார் ஸ்டீல் வியாபாரியின் விலைப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் ஒப்புதலுக்கு

அலுவலகக் குறிப்பு–

1) மன்றம் அங்கீகரிக்கலாம்.

2) அதிகபட்ச தொகைக்கு விலைப்புள்ளி வழங்கிய குமார் ஸ்டீல் வியாபாரிகளுக்கு கிலோ ரூ.5.50/–ஐ மன்றம் அங்கீகரிக்கலாம்.

| | |
|---|---|
| பொருள்.11 | இந்நகராட்சிக்குச் சொந்தமான கைக்கோலார் ஊரணியில் அமைந்துள்ள கூட்டுறவு விற்பனை சங்கத்திற்கு மண்ணெண்ணெய் விற்பனை நிலையம் நடத்துவதற்கு 75X75 அளவுள்ள 5625 சதுர அடி காலியிடம் வழங்கப்பட்டு, அதற்கு மாத வாடகையாக ரூ.8662.50 என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. பின்னர் 01.02.2000 முதல் மேற்கண்ட இடத்திற்று அருகே உழவர் சந்தை அமைக்கப்பட்டதால், மண்ணெண்ணெய் விற்பனை நிலையம் இடமானது 75X46 = 3450 ஆக குறைக்கப்பட்டு அதற்கு மாத வாடகை ரூ.5313/— என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. பின்னர் அரசாணை நிலை எண்.38, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை ந.நி.5, நாள்.28.02.2001ன் படியும் மற்றும் இந்நகர்மன்றத் தீர்மான எண்.430, நாள்.12.11.2012ன்படி 01.03.2001 முதல் மாத வாடகை ரூ.1817/— என மூன்றாண்டுக்கு ஒருமுறை 15 சதவீதம் வாடகை உயர்வு செய்து கொள்ள மாத வாடகை தொகை ரூ.1817/—ஐ நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நிர்ணயம் செய்யப்பட்ட மாத வாடகைத் தொகையினை வசூல் செய்ய ஏதுவாக கணினியில் கேட்பு எழுப்பப்படாமல் இதுநாள் வரை வரப்பெற்ற வாடகை தொகையினை முன் வைப்புத் தொகை பதிவேடு (4018) வரவு வைக்கப்பட்டு வரப்பெற்றுள்ளது.<br>மேற்படி கடை வாடகை தொகையினை வசூல் செய்ய இயலாத சூழ்நிலை உள்ளதால், இனி வரும் காலங்களில் வாடகை தொகையினை வசூல் செய்ய ஏதுவாக தற்பொழுது கணினியில் 3 ஆண்டுக்கு ஒருமுறை 15 சதவீதம் வாடகை உயர்வு செய்து கேட்பு பதிவேற்றம்<br>01.03.2001 முதல் 29.02.2004 = 1817 + 273<br>01.03.2004 முதல் 28.02.2007 = 2090+314<br>01.03.2007 முதல் 29.02.2007 = 2404+361<br>01.03.2010 முதல் 28.02.2013 = 2765+415<br>01.03.2013 முதல் 29.02.2016 = 3180+477<br>01.03.2016 முதல் 28.02.2017 = 3657+549<br>01.03.2019 முதல் = 4206 என செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு—<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.1175/96/சி2) |
| பொருள்.12 | இந்நகராட்சிக்குச் சொந்தமான பேருந்து நிலையம் எதிர்புறம் உள்ள காலியிடக் கடை வ.வி.எண்.134/4090 ஐ திரு.எம்.வாழவந்தான் என்பவர் கடையை நடத்தி வருகிறார். மேற்படி உரிமத்தை அவருடைய அனுபோதராகிய திரு.மு.முருகேசன் என்பவருக்கு பெயர் மாற்றம் செய்து கொள்ள ரூ.50/—க்கான பத்திரத்தில் (Advacate Notary) வழக்கறிஞர் வாயிலாக ஒப்புதல் பெறப்பட்டு மேற்படி உரிமத்தை பெயர் மாற்றம் செய்து கொடுக்க விண்ணப்பித்துள்ளார்.<br>அரசாணை (நிலை) எண்.92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.03.07.07ன்படி மேற்படி உரிமத்திற்கு திரு.மு.முருகேசன், என்பவர் முன்பணமாக ரூ.34272/—ம், பெயர் மாற்றக் கட்டணம் ரூ.34272/ம் மற்றும் விண்ணப்பக் கட்டணம் ரூ.500/—ம் செலுத்தி வாடகையும் நிலுவையின்றி செலுத்தப்பட்டுள்ளதால், மேற்படி உரிமத்தை திரு.எம்.வாழவந்தான் பெயரிலிருந்து திரு.மு.முருகேசன், என்பவருக்கு பெயர் மாற்றம் செய்ய மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு—<br>மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.13 | இந்நகராட்சிக்குச் சொந்தமான அண்ணா பேருந்து நிலையத்தில் உள்புறம் உள்ள புதிய கடை எண்.16ஐ, திருமதி.எம்.பூச்செண்ட் என்பவர் கடையினை நடத்தி வருகிறார். மேற்கண்ட உரிமத்தை தற்பொழுது அவரது அனுபோதராகிய திருமதி.எம்.பத்மாவதி என்பவருக்கு பெயர் மாற்றம் செய்து கொள்ள ரூ.50/—க்ான பத்திரத்தில் (Advacate Notary) வழக்கறிஞர் வாயிலாக ஒப்புதல் பெறப்பட்டு மேற்படி உரிமத்தை பெயர் மாற்றம் செய்து கொடுக்க விண்ணப்பித்துள்ளார்.<br>அதன்படி அரசாணை நிலை எண்.92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.03.07.07இன்படி, மேற்கண்ட உரிமத்திற்கு திருமதி.எம்.பத்மாவதி என்பவர் குத்தகை முன்பணம் ரூ.44136/—ம், பெயர்மாற்றக் கட்டணம் ரூ.44136/—ம் மற்றும் பெயர் மாற்ற விண்ணப்பக் கட்டணம் ரூ.500/—ம் செலுத்தப்பட்டு வாடகையும் நிலுவையின்றி செலுத்தப்பட்டுள்ளதால், மேற்கண்ட உரிமத்தை திருமதி.எம்.பூச்செண்ட் பெயரிலிருந்து திருமதி.எம்.பத்மாவதி பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது. |

<table>
<tr><td></td><td>அலுவலகக் குறிப்பு—<br>மன்றம் அனுமதிக்கலாம்.</td></tr>
<tr><td>பொருள்.14</td><td>பரமக்குடி நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு 2019—2020ம் ஆண்டிற்கான தளவாடச் சாமான்களை துப்புரவு ஆய்வாளர்களின் அறிக்கையின்படி கீழ்க்கண்ட விபரங்களின்படி வாங்க வேண்டியுள்ளது.
<table>
<tr><th>வ.எண்.</th><th>பொருட்களின் விபரம்</th><th>எண்ணிக்கை</th></tr>
<tr><td>1</td><td>தெரு கூட்டுமாறு பிடியுடன்</td><td>75</td></tr>
<tr><td>2</td><td>மண்வெட்டி</td><td>30</td></tr>
<tr><td>3</td><td>கடப்பாறை</td><td>10</td></tr>
<tr><td>4</td><td>வாடுகால் கரண்டி</td><td>25</td></tr>
<tr><td>5</td><td>குப்பை அள்ளும் கொக்கி</td><td>25</td></tr>
<tr><td>6</td><td>அரிவாள்</td><td>20</td></tr>
<tr><td>7</td><td>சம்மட்டி</td><td>5</td></tr>
<tr><td>8</td><td>தகரக்கூடை</td><td>50</td></tr>
<tr><td>9</td><td>தகரக்கையோடு</td><td>50</td></tr>
<tr><td>10</td><td>தெருகூட்டும் பிரஸ் பிடியுடன்</td><td>50</td></tr>
<tr><td>11</td><td>பாங்கருவாள் பிடியுடன்</td><td>10</td></tr>
<tr><td>12</td><td>இரும்புவாளி</td><td>20</td></tr>
<tr><td>13</td><td>தென்னங்கூட்டுமாறு</td><td>100</td></tr>
</table>
மேற்கண்ட தளவாடச் சாமான்களை சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி கோரி கொள்முதல் செய்வதற்கும், அதற்குண்டான உத்தேச செலவினம் ரூ.150000/—க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.மேற்கண்ட தளவாடச் சாமான்களை ரூ.1.50 லட்சத்திற்கு உத்தேச செலவினத்திற்குள் சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி கோரி கொள்முதல் செய்வதற்கும், மன்றம் அனுமதிக்கலாம்.<br>3.செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.</td></tr>
<tr><td>பொருள்.15</td><td>இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் கழிவு நீர் அகற்ற பயன்படுத்தப்பட்டு வரும் கழிவு நீர் வாகனம் கொள்முதல் செய்யப்பட்டு 20 வருடங்களுக்கு மேல் ஆகி விட்டபடியால் மேற்கண்ட வாகனத்தின் டேங்கர், பம்ப்பிங் மோட்டார் மற்றும் வாகன இன்ஜின் அடிக்கடி பழுதாகி வாகனத்தை இயக்க முடியாத நிலை உள்ளது.<br>மேலும் தற்போது பரமக்குடி நகராட்சியில் Fecal Sludge Treatment Plant அமைக்கப்பட்டு வருவதால் நகர் பகுதிகளில் உள்ள நச்சுத் தொட்டி கழிவுகளை அகற்ற வேண்டியுள்ளது. மேற்கண்ட வாகனம் பழைய முறையிலான புட் வால்வு முறையில் இயங்கும் தன்மையுடையது. இது மனித கழிவுகளை அகற்றுவோர் தடைச்சட்டம் 2013ன் படிசுகாதார முறைப்படியிலான தொழில் நுட்பங்கள்</td></tr>
</table>

| | |
|---|---|
| | இல்லாத வாகனமாக உள்ளதால், மேற்கண்ட வாகனத்தை கழிவு செய்து விட்டு (CONDEM) புதிதாக ஏர்கம்ப்ரஸர் தொழில் நுட்பத்துடன் கூடிய புதிய கழிவு நீர் ஊர்தி வாங்கி வழங்க நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அனுமதி பெற நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு–<br>1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.பழைய கழிவு நீர் வாகனத்தை கழிவு செய்து விட்டு புதிதாக ஏர்கம்ப்ரஸர் தொழில் நுட்பத்துடன் கூடிய புதிய கழிவு நீர் ஊர்தி வாங்கி வழங்க நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கடிதம் அனுப்பிட மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.16 | பரமக்குடி நகராட்சிக்குட்பட்ட 36 வார்டு பகுதிகளிலும் டெங்கு தடுப்பு பணிகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதனை தொடர்ந்து வீடுகளில் தண்ணீர் சேமித்து வைக்கும் கலன்கள், தண்ணீர் தொட்டிகளில் கொசுப்புழுக்களின் உற்பத்தியை அழிக்கக்கூடிய டெமிபோஸ் 50% EC என்ற வகை மருந்து களப்பணி உதவியாளரின் அறிக்கையின்படி அலுவலக இருப்பில் மிக குறைவாக உள்ளதாகவும் மேற்கண்ட மருந்து ஒரு மாத காலத்திற்கு மட்டுமே பயன்படுத்தக்கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>அதன்பொருட்டு பொது சுகாதார அவசர அவசியம் கருதியும், நோய் தடுப்பின் முக்கியத்துவம் கருதியும் கீழ்க்கண்ட கொசுப்புழு ஒழிப்பு மருந்தினை கொள்முதல் செய்ய வேண்டியுள்ளது.<br>டெமிபாஸ் 50% EC – 200 லிட்டர்<br><br>மேற்கண்ட கொசுப்புழு ஒழிப்பு மருந்தினை டெங்கு காய்ச்சலை தடுக்கும் பொருட்டு பொசுகாதார அவசர அவசியம் கருதி, தமிழ்நாடு மருத்துவ சேவைக்கழக அங்கீகாரம் பெற்ற நிறுவனமான பாராமவுண்ட் பெஸ்டிசைடு லிமிடெட், சென்னை என்ற நிறுவனத்திடமிருந்து ரூ.150000/– உத்தேச செலவினத்தில் நேரடியாக கொள்முதல் செய்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு–<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பொசுகாதார அவசர அவசியம் கருதி, தமிழ்நாடு மருத்துவ சேவைக்கழக அங்கீகாரம் பெற்ற நிறுவனமான பாராமவுண்ட் பெஸ்டிசைடு லிமிடெட், சென்னை என்ற நிறுவனத்திடமிருந்து ரூ.150000/– உத்தேச செலவினத்தில் நேரடியாக கொள்முதல் செய்ததை மன்றம் அனுமதிக்கலாம்.<br>3.செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.17 | இந்நகராட்சி சுகாதார ஆய்வாளர்களின் அறிக்கையில் இந்நகராட்சியில் 36 வார்டு பகுதிகளிலும் தினசரி சுற்றுப்புற சுகாதார பணிகளுக்காகவும், பேருந்து நிலையம், தினசரி மார்க்கெட், வாரச்சந்தை, மீன் மார்க்கெட், உழவர்சந்தை மற்றும் பொதுமக்கள் கூடும் இடங்கள் ஆகிய பகுதிகளில் பொதுசுகாதார பணிகளுக்காகவும், முக்கிய திருவிழாக்களில் சுகாதார பணிகளுக்காகவும், டெங்கு காய்ச்சல் போன்ற தொற்று நோய்கள் பரவாமல் தடுப்பதற்கு தேவையான கிருமி நாசினிகளான நீர்த்த சுண்ணாம்புத் துாள் – 800 கிகி, பிளீச்சிங் பவுடர் – 50 கி.கி, மற்றும் பினாயில் – 65 லிட்டம், மட்டுமே தற்போது இருப்பில் உள்ளதாகவும், மேற்கண்ட கிருமி நாசினிகள் ஒரு வார காலத்திற்கு மட்டுமே பயன்படுத்தக் கூடும் என்றும், மேலும் முக்கிய திருவிழாக்கள் நடைபெற் உள்ளதாகவும், மழைக் காலம் தொடங்க இருப்பதாலும் கீழ்கண்ட கிருமிநாசினிகளை கீழ்கண்ட அளவுகளில் வாங்கி வழங்குமாறு தெரிவித்துள்ளார்கள்.<br><br>1. நீர்த்த சுண்ணாம்புத்துாள் – 3000 கி.கி.<br>2. பிளீச்சிங் பவுடர் – 2000 கி.கி<br>3. பினாயில் – 500 லிட்டர் |

மேற்கண்ட கிருமிநாசினிகளை பொதுசுகாதார அவசர அவசியம் கருதி ரூ.3.50 லட்சம் உத்தேச செலவினத்தில் சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி கோரி கிருமி நாசினிகள் கொள்முதல் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

பொருள்.18

பரமக்குடி நகராட்சி எல்லைக்குட்பட்ட எமனேஸ்வரம் தரைப்பாலம் மேல் பகுதியில் உள்ள 8‘ விட்டமுள்ள ஆழ்குழாய் கிணற்றிலிருந்து நகரில் உள்ள சிறிய வணிக நிறுவனங்களான புரோட்டா கடைகள், டீ கடைகள் மற்றும் சிறிய ஓட்டல்களுக்கு மாட்டு வண்டிகள் மற்றும் டில்லர்கள் வாயிலாக தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. மேற்படி வாகனங்களுக்கு மன்றத்தால் கட்டணத் தொகை நிர்ணயம் செய்யப்பட்டு வசூல் செய்யப்பட்டு வருகின்றது. தற்போது நிலவி வரும் வறட்சி காரணமாக இந்த ஆழ்குழாய் கிணற்றில் நீர்மட்டம் குறைந்து விட்டதால் மின் மோட்டார்கள் கூடுதல் நேரம் இயக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. இதனால் மின்சாரக் கட்டணம் கூடுதலாகிறது. இதனால் வருவாயைக் காட்டிலும் கூடுதல் செலவு ஏற்படுகிறது. எனவே தண்ணீர் பிடிக்கும் மேற்படி வாகனங்களின் கட்டணத் தொகையை கீழ்கண்டவாறு உயர்த்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வாகனம் | ஏற்கனே வசூல் செய்யும் தொகை ரூ. | தற்பொது நிர்ணயம் செய்யப்படும் தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | மாட்டு வண்டி | ரூ.15.00 / 1 எண்ணம் | ரூ.50.00 / 1 எண்ணம் |
| 2. | டில்லர் | ரூ.60.00/ 1 எண்ணம் | ரூ.200,00/ 1 எண்ணம் |

அலுவலகக் குறிப்பு—

மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள்.19

இந்நகராட்சிக்குட்பட்ட 36 வார்டு பகுதிகளிலும், தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் குப்பைகளை, பரப்புரையாளர்கள் மற்றும் துப்புரவுப் பணியாளர்களைக் கொண்டு மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என இரண்டு வகைகளாக பிரிக்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட மக்கும் குப்பை, மக்காத குப்பை மற்றும் பிளாஸ்டிக் கழிவுகளை எடைபோடுவதற்காக, நான்கு துப்புரவு ஆய்வாளர் பிரிவுகளுக்குட்பட்ட பொதுசுகாதார டிவிஷன்கள் – 5க்கு தலா 1 வீதம், 5 எண்ணம் எலக்ட்ரானிக் எடை இயந்திரம் வாங்கிட உத்தேச செலவினம் ரூ.60,000/—க்கும், தகுதி வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரி, எடை இயந்திரங்களை வாங்கிடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு—

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) தகுதி வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோர அனுமதிக்கலாம்.
3) செலவினத்தை பயனாளர் கட்டணத்திலிருந்து (SUC) செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். /2019/எச்2 )

பொருள்.20

பரமக்குடி நகராட்சி பொதுசுகாதார வாகனம் டி.என்.65 —சி, 8406 (டிராக்டர்) க்கு வருடாந்திர தகுதிசான்று 20.082019 உடன் முடிவடைந்துள்ளது. அதன் பொருட்டு பழுதுப்பணிகள் மேற்கொள்ள உத்தேச செலவினம் கணக்கிட சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரியதில், 1.பாவு ஆட்டோ மொபைல்ஸ் இன்ஜினியரிங் ஒர்க்ஸ் நிறுவனம் ரூ.84450/—க்கும், 2. ஸ்ரீ தீபா எண்டர் பிரைசஸ் நிறுவனம் ரூ.89900/—க்கும் விலைப்புள்ளிகள் அளித்துள்ளனர். அதன்படி ரூ.90,000/— உத்தேச செலவினத்திற்குள் சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடமிருநூது ஒப்பந்தப்புள்ளி பெற்று பழுதுப்பணிகள் மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதிக்கு.

<table>
<tr><td></td><td>அலுவலகக் குறிப்பு–<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) ரூ.90,000/– உத்தேச செலவினத்திற்குள் சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி கோரி பழுதுப்பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>3) பழுதுப்பணிக்கு ஆகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.</td></tr>
<tr><td>பொருள்.21</td><td>இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள ஆணையாளர் குடியிருப்பு கட்டிடத்தில் வர்ணம் பூசவும், மராமத்துப்பணிகள் மேற்கொள்ளவும் இந்நகர்மன்ற தீர்மான எண். நாள்.28.02.2019ன்படி அனுமதி பெறப்பட்டு உள்ளூர் பணிமனைகளில் 19.06.2019ந் தேதி ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.
<table>
<tr><td>1</td><td>திரு. எம். சங்கர், ஒப்பந்ததாரர்</td><td>0.02% மதிப்பீட்டு ரேட்டைவிட குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு. ஆர். ஆறுமுகம், ஒப்பந்ததாரர்</td><td>2.96% மதிப்பீட்டு ரேட்டைவிட குறைவு</td></tr>
</table>
அலுவலகக்குறிப்பு –<br>வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. எம். சங்கர், ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் குறைவாக இருப்பதால் மன்றம் அனுமதிக்கலாம்.</td></tr>
<tr><td>பொருள்.22</td><td>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட மஞ்சள்பட்டிணத்தில் உள்ள மின் மயானத்தில் எரிவாயு தகனமேடை பழுதானதை சரிசெய்யும் பணிக்கு இந்நகர்மன்ற தீர்மான எண். நாள்.31.05.2019 ன்படி அனுமதி பெறப்பட்டு 26.06.2019ந் தேதி ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.
<table>
<tr><td>1</td><td>திரு. என். முருகேசன், ஒப்பந்ததாரர்</td><td>0.08% மதிப்பீட்டு ரேட்டைவிட குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு. எம். குமார், ஒப்பந்ததாரர்</td><td>1.04% மதிப்பீட்டு ரேட்டைவிட அதிகம்</td></tr>
</table>
அலுவலகக்குறிப்பு –<br>வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. என். முருகேசன், ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் குறைவாக இருப்பதால் மன்றம் அனுமதிக்கலாம்.</td></tr>
<tr><td>பொருள்.23</td><td>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட திடக்கழிவு மேலாண்மை திட்டம் மூலம் 19 எண்ணம் பேட்டரி ஆப்ரேட்டர் வாகனத்திற்கு தேவையான பேட்ரிகளுக்கு சார்ஜ் போட போதுமான மின்வசதி செய்வதற்கும் இந்நகர்மன்ற தீர்மான எண். நாள்.31.05.2019 ன்படி அனுமதி பெறப்பட்டு உள்ளூர் பணிமனைகளில் 19.06.2019ந் தேதி ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.
<table>
<tr><td>1</td><td>திரு. எம். சங்கர், ஒப்பந்ததாரர்</td><td>0.05% மதிப்பீட்டு ரேட்டைவிட குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு. ஆர். ஆறுமுகம், ஒப்பந்ததாரர்</td><td>1.68% மதிப்பீட்டு ரேட்டைவிட குறைவு</td></tr>
</table></td></tr>
</table>

| | |
|---|---|
| | அலுவலகக்குறிப்பு –<br>வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. எம். சங்கர், ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் குறைவாக இருப்பதால் மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.24 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தெருவிளக்குகளை பராமரிப்பு செய்ய தேவையான பணியாளர்களை தற்காலிகமாக அமர்த்தும் பணிக்கு ரூ.3.00 லட்சம் மதிப்பீட்டில் 31.05.2019 இந்நகர்மன்ற தீர்மான எண். நாள்.31.05.2019ன்படி அனுமதி பெறப்பட்டு 26.06.2019ம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.<br><br>1 \| M/s M.S. Man Power Agencey, Paramakudi. \| 0.03% மதிப்பீட்டு ரேட்டை விட குறைவு<br>2 \| M/s Exsernet, Madurai. \| 2.83% மதிப்பீட்டு ரேட்டை விட அதிகம்<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/s Man Power Agencey, Paramakudi கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டு ரேட்டைவிட 0.03% குறைவாக இருப்பதால் மன்றம் ஏற்றுக்கொள்ளலாம். |
| பொருள்.25 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட மேலச்சத்திரம், சேதுபதி நகர், சௌகதலி ரோடு மற்றும் கொடிக்கல்காரத் தெரு பகுதியில் பழுதடைந்துள்ள வடிகால்களை சரிசெய்வதற்கும், சிறுபாலங்கள் மராமத்துப்பணி செய்வதற்கும் இந்நகர்மன்ற தீர்மான எண். நாள்.31.05.2019ன்படி அனுமதி பெறப்பட்டு உள்ளூர் பணிமனைகளில் 19.06.2019ந் தேதி ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.<br><br>1 \| திரு. எம். சங்கர், ஒப்பந்ததாரர் \| 0.04% மதிப்பீட்டு ரேட்டைவிட குறைவு<br>2 \| திரு. ஆர். ஆறுமுகம், ஒப்பந்ததாரர் \| 1.71% மதிப்பீட்டு ரேட்டைவிட குறைவு<br><br>அலுவலகக்குறிப்பு –<br>வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. எம். சங்கர், ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் குறைவாக இருப்பதால் மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.26 | இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள தலைமை நீரேற்று நிலையங்கள் மற்றும் இதர நீரேற்று நிலையங்களில் உள்ள மின்மோட்டார்களில் அவ்வப்பொழுது ஏற்படும் பழுதுகளை சீர்செய்யும் பணிக்கு ரூ.5.00 லட்சம் மதிப்பீட்டில் செய்ய இந்நகர்மன்ற தீர்மான எண். நாள்.31.05.2019 ன்படி அனுமதி பெறப்பட்டு 18.06.2019ந் தேதி ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.<br><br>1 \| திரு. எம். சங்கர், ஒப்பந்ததாரர் \| 1.76% மதிப்பீட்டு ரேட்டைவிட அதிகம்<br>2 \| திரு. பி. கோவிந்தன், ஒப்பந்ததாரர் \| 0.04% மதிப்பீட்டு ரேட்டைவிட குறைவு |

| | |
|---|---|
| | அலுவலகக்குறிப்பு –<br>வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. பி. கோவிந்தன், ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் குறைவாக இருப்பதால் மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.27 | இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள குடிநீர் லாரி TN65 B 3907 வாகனத்தில் டைனமோ பழுதுதடைந்துள்ளது மற்றும் ஏர் பிரேக் சரிசெய்து பொருத்திக்கொடுக்கவும் மற்றும் இதர பழுதடைந்த பொருட்களை மாற்றி அமைக்கவும் அதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.8500/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>மேலும், குடிநீர் அவசியம் கருதி மேற்கண்ட பணிக்கு விலைப்புள்ளிகள், கீழ்கண்டவாறு பெறப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது.<br>1. என்.கணபதி மோட்டார் ஒர்க்ஸ், பரமக்குடி. – ரூ.8500/–<br>2. செந்தில் மோட்டார் ஒர்க்ஸ், பரமக்குடி. – ரூ.8650/–<br>மேற்படி வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி ரேட் கொடுத்துள்ள என்.கணபதி மோட்டார் ஒர்க்ஸ், பரமக்குடி என்ற நிறுவனத்தினருக்கு பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>அலுவலகக் குறிப்பு–<br>மன்றம் அனுமதிக்கலாம். மேற்படி பணிக்கான செலவினத்தை குடிநீர் பிரிவு நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.28 | இந்நகராட்சியில் செயல்பட்டு வரும் தூய்மை இந்தியா திட்டத்தின் முன்னேற்ற அறிக்கையும், IEC Activities குறித்த புகைப்படங்களை கலர் பிரிண்டிங் செய்து உடனுக்குடன் நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு அனுப்பிவைக்க வேண்டியுள்ளதால் கலர் பிரிண்டர் 1 எண்ணம் வாங்குவதற்கு அதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.15000/–க்கு மன்றத்தின் முன் அனுமதியுடன்<br>அத்தியாவசியம் கருதி கலர் பிரிண்டர் ஒரு எண்ணம் வாங்குவதற்கு விலைப்புள்ளிகள், கீழ்கண்டவாறு பெறப்பட்டுள்ளது.<br>1. M/S. கருணாம்பிக்கை இன்போ சிஸ்டம் சர்வீஸஸ், சிவகங்கை – ரூ.14300/–<br>2. கணபதி இமேஜிங் சொலியூசன், கரூர் – ரூ.15300/–<br>3. எஸ். கே. எண்டர்பிரைசஸ், மதுரை – ரூ. 14550/–<br>மேற்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி ரேட் கொடுத்துள்ள M/S. கருணாம்பிக்கை இன்போ சிஸ்டம் சர்வீஸஸ், சிவகங்கை நிறுவனத்தினடமிருந்து கலர் பிரிண்டர் 1 எண்ணம் வாங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது,<br>அலுவலகக் குறிப்பு–<br>மன்றம் அனுமதிக்கலாம். மேலும் கலர் பிரிண்டர் ஒரு எண்ணம் வாங்குவதற்கான செலவினத்தை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.29 | பரமக்குடி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் இயங்கி வரும் வாகனங்களை இயக்குவதற்கு நகர்மன்ற தீர்மான எண். 540, நாள். 25.07.2018 ன் படி EXSERNET Madurai என்ற நிறுவனத்திடமிருந்து 10 ஓட்டுனர்கள் பெற்று மேற்கண்ட வாகனங்கள் இயக்கப்பட்டு வருகின்றது. இந்நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பணி உத்தரவு 31.07.2019 ம் தேதியுடன் முடிவடைகின்றது.<br><br>மேலும் மேற்கண்ட நிறுவனத்திடமிருந்து மேலும் ஒரு வருட காலத்திற்கு மேற்கண்ட பணியினை மேற்கொள்ள பணி நீட்டிப்பு செய்து உத்தரவு வழங்குமாறு கடிதம் வரப்பெற்றுள்ளது. மேற்கண்ட நிறுவனம் கடந்த ஒரு வருட காலத்தில் எவ்வித புகாருக்கும் இடமளிக்காத வகையில் ஓட்டுனர் பணிகள் மேற்கொண்டு வருவதால் மேற்கண்ட நிறுவனத்திற்கு மேலும் மூன்று மாத காலத்திற்கு (01.08.2019 முதல் 31.10.2019) மட்டும் அதே ஊதிய விகிதத்தில் ஓட்டுனர் பணிகள் மேற்கொள்ள மேற்கண்ட நிறுவனத்திற்கு பணி நீட்டிப்பு செய்து உத்தரவு வழங்கிட நகர் மன்றத்தின் அனுமதிக்கு. |

| | |
|---|---|
| | அலுவலகக்குறிப்பு –<br><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. EXSERNET Madurai என்ற நிறுவனத்திற்கு மேலும் மூன்று மாத காலத்திற்கு (01.08.2019 முதல் 31.10.2019) மட்டும் அதே ஊதிய விகிதத்தில் ஓட்டுனர் பணிகள் மேற்கொள்ள பணி நீட்டிப்பு செய்து உத்தரவு வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.<br>3.செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.1948/2015/எச்2 |
| பொருள்.30 | பாராளுமன்றத் தேர்தல் 2019 மற்றும் பரமக்குடி 209, சட்டமன்ற இடைத்தேர்தல் 18.04.2019ல் நடைபெற்று நிறைவுற்ற நிலையில் மேற்படி தேர்தலில் தேர்தல் பணியான வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கத் திருத்தமுறை, வாக்களிக்கும் முறையையும், வாக்காளர்கள் கடமைகள் யாவும் பொதுமக்கள் அறியும் வண்ணம் பரமக்குடிந கர் பகுதியில் வாக்காளர் விழிப்புணர்வினை விளம்பரப்படுத்துதல், வாக்குச்சாவடி மையங்களின் அடையாள குறியீடு செய்தல் மற்றும் இதர பணிகள் தேர்தல் அவசர அவசியம் கருதி மேற்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பணிகள் மேற்கொண்டதற்கு உத்தேச செலவினத் தொகை ரூ.50000/— மட்டும் பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு—<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண்.1968/18/சி3 (தேர்தல்) |
| பொருள்.31 | மாண்புமிகு. உள்ளாட்சி மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரையின்படி பரமக்குடி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள குடியிருப்புகள், கடைகள், வணிக நிறுவனங்கள் மற்றும் அரசுத்துறை கட்டிடங்களுக்கு மழை நீர் சேகரிப்பு கட்டமைப்பு அமைக்க பொதுமக்கள் அறியும் வண்ணம், அறிவிப்பு நோட்டீஸ், பேனர்கள் மற்றும் ஆட்டோ விளம்பரம் செய்ய வேண்டிய இருப்பதால், அதற்கான உத்தேச செலவினம் ரூ.100000/—ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு—<br>மன்றம் அனுமதிக்கலாம். |

தனி அலுவலர்
பரமக்குடி நகராட்சி.

**<u>மன்றப் பொருள்</u>**

மாண்புமிகு. உள்ளாட்சி மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரையின்படி பரமக்குடி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள குடியிருப்புகள், கடைகள், வணிக நிறுவனங்கள் மற்றும் அரசுத்துறை கட்டிடங்களுக்கு மழை நீர் சேகரிப்பு கட்டமைப்பு அமைக்க பொதுமக்கள் அறியும் வண்ணம், அறிவிப்பு நோட்டீஸ், பேனர்கள் மற்றும் ஆட்டோ விளம்பரம் செய்ய வேண்டிய இருப்பதால், அதற்கான உத்தேச செலவினம் ரூ.50,000/—ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு—

மன்றம் அனுமதிக்கலாம்.

நகரமைப்பு அலுவலர் ஆணையாளர்